அ.வ.எண்: 96/2017 நாள்: 07.10.2025

வா.சா.1 – கருப்பையா

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

1. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது ஆனால் கையெழுத்து போடுவேன். நான் என்ன பரிகாரம் கோரி தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பட்டா மாற்றம் செய்வதற்காக மனு செய்தேன் அது சம்பந்தமாக தான் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா பிராதை என்னிடம் படித்துக் காண்பித்தார்களா என்றால் படித்துக் காண்பித்தார்கள். யார் மீது தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் முத்தையா என்பவர் மீது தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் தாவா வழக்கிற்காக எத்தனை ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை. தாவா வழக்கு சம்பந்தமாக என் வழக்கறிஞருக்கு விபரங்கள் யார் கூறியது என்றால் நான் தான் கூறினேன்.
2. தாவா சொத்து தற்பொழுது காட்டு கருவேல மரங்கள் மண்டி உள்ளது என்றால் சரிதான் உழுவ விடாததால் காட்டு கருவேலை மண்டி உள்ளது. தாவா சொத்தில் எத்தனை வருடங்களாக காட்டு கருவேல மரங்கள் மண்டி உள்ளது என்றால் சுமார் 4 அல்லது 5 வருடங்களாக உள்ளது. தாவா வழக்கின் பிரதிவாதிகள் ஆன சுப்பிரமணியன் மற்றும் சண்முகம் என்பவர் எனது அண்ணன் முத்தையாவின் மகன்கள் தான் என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமாக என் அண்ணன்

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2025.10.07 16:39:36 +0530

முத்தையா என்பவர் என் மீது பாகப்பிரிவினை வழக்கு ஓ.எஸ்.105/1988ஐ சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளாரா என்றால் இல்லை. மேற்படி வழக்கு தொடர்பான தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை ஆகியவற்றை நான் எனது தரப்பில் வாசாஆ3, 4 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றும் தற்போது பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

3. தற்போது மேற்படி வழக்கை குறித்து எனக்கு விவரங்கள் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. எனது தரப்பு ஆவணமான வாசாஆ3 பத்தி 7ல் பூசத்துரை என்பவர் என்னிடம் 200 ரூபாய் பெற்றுக் கொண்டு வெளியூர் சென்று விட்டதாகவும் முதலில் திருச்சியில் இருந்ததாகவும் பின்பு சேலத்தில் இருந்ததாகவும் தன்னிடம் கூறியதாக கூறிவிட்டுபின்பு பூசத்துறை தற்போது எங்கு இருக்கிறார் என்று மேற்படி வழக்கின் வாதி மற்றும் பிரதிவாதியாக இருவருக்கும் தெரியவில்லை என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 26.03.1991ம் ஆண்டு தாவா சொத்து மற்றும் மற்ற பொது குடும்ப சொத்துக்கள் சம்பந்தமாக எனக்கு ஒரு பங்கும் முத்தையா என்பவருக்கு ஒரு பங்கும் பூசத்துறை என்பவருக்கு ஒரு பங்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

4. மேற்படி ஓ.எஸ்.105/1988 ல் இடைமனு எண்.117/1996 அதில் நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் பூசத்துரை என்பவரை கண்டுகொள்ள முடியவில்லை என்றும் அவருடைய பாகத்தை நான் மற்றும் எனது அண்ணன் முத்தையா ஆகியோர் பிரித்து எடுத்துக் கொள்ளும் படியும் குறிப்பிட்டுள்ளார் என்றால் அது குறித்து எனக்கு

PREMI R
Digitally signed by PREMI R
Date: 2025.10.07 16:39:46 +0530

தெரியாது. தாவா சொத்துக்களை எனது தம்பி பூசத்துறை எந்த தேதியில் எனக்கு கிரயம் எழுதிக் கொடுத்தார் என்றால் தேதி நினைவில் இல்லை ஆனால் வழக்கு முடிந்த பின்பு எழுதிக் கொடுத்தார். மேற்படி கிரைய ஆவணம் பதிவு செய்யப்பட்டதா என்றால் நோட்டரி பப்ளிக் முன்பு பதிவு செய்து எழுதி வாங்கியது ஆகும்.

5. தாவா சொத்தை நான் 2003 ஆம் ஆண்டு கிரயம் பெற்ற பொழுது அதன் மதிப்பு என்ன இருக்கும் என்றால் ஏக்கர் சுமார் 20 முதல் 25 ஆயிரம் வரை இருக்கும். மேற்படி கிரைய பத்திரத்தை பூசத்துறை எங்கு வைத்து எழுதிக் கொடுத்தார் என்றால் தேவகோட்டையில் வெள்ளையன்ஊரணி பகுதியில் உள்ள கடையில் வைத்து எழுதி கொடுத்தார். மேற்படி கிரைய பத்திரத்தில் சாட்சி கையெழுத்துக்கள் பெற்றுள்ளன என்றால் நடராஜன் மற்றும் கண்ணாயிரம் ஆகிய இருவரிடம் சாட்சி கையெழுத்து பெற்றுள்ளேன் அவர்கள் இருவரும் என் ஊரைச் சேர்ந்தவர்கள் தான். மேற்படி சாட்சி கையெழுத்து செய்த இருவரையும் என் தரப்பு சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேன் என்றால் எனக்கும் அவர்களுக்கும் இடையே மனக்கசப்பு உள்ளதால் நான் அழைத்தால் அவர்கள் வர மாட்டார்கள். பூசத்துறையை நான் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேன் என்றால் அவர் எங்கு உள்ளார் என்று தெரியவில்லை அவர் சென்று எத்தனை வருடங்கள் இருக்கும் என்றால் சுமார் 10 முதல் 15 வருடங்கள் இருக்கும். எனது அண்ணன் முத்தையா பாகப்பிரிவினை வழக்கான ஓ.எஸ்.105/1988 வழக்கை தாக்கல் செய்யும்போது பூசத்துறை எங்கு இருந்தார் என்றால் திருச்சியில் இருந்தார்.

PREMI R
Digitally signed by PREMI R
Date: 2025.10.07 16:39:54 +0530

6. மேற்படி வழக்கில் பூசத்துறை ஆஜர் ஆனாரா என்றால் ஆஜராக இல்லை ஆனால் பங்குகள் எல்லாம் பிரித்த பிறகு ஊருக்கு சென்று விட்டார். மேற்படி வழக்கில் நீதிமன்ற ஆணையர் சொத்துக்களை அளவீடு செய்யும் போது பூசத்துறை இருந்தாரா என்றால் இருந்தார். அப்பொழுது பூசத்துரை எங்கு இருந்தார் என்றால் என் வீட்டில் தான் இருந்தார். வா.சா.5 ஆவணம் பதிவு செய்யாத ஆவணம் என்பதால் அதற்கான முத்திரை தீர்வு கட்டணத்தை செலுத்துவதற்கு நான் மனு செய்ய தயாராக உள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றும் அந்த மனுவை குறித்து எனக்கு தெரியுமா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

7. நான் தாவா சொத்தில் தாவா சொத்துக்களுக்கு குறிப்பிட்டுள்ள நான்குமால் எதை வைத்து குறிப்பிடப்பட்டது என்றால் விஏஓ கொடுத்த நான்குமால் சான்றான வா.சா.10 ஆவணத்தை வைத்து தான் நான்குமால் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி வாசா 10 ஆவணத்தில் உள்ள நான்குமாலும் தாவா பிராதில் நான் குறிப்பிட்டுள்ள நான்குமாலும் வெவ்வேறாக உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து தற்போது வரை கருவக்காடு வளர்ந்து தான் உள்ளது என்றும் நான் என் பிராதில் நெல் விவசாயம் செய்வதாக குறிப்பிட்டுள்ளது தவறு என்றும் சொன்னால் சரியல்ல.

8. நூறு ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள சொத்துக்களை கிரயம் பெற்ற கிரைய பத்திரங்கள் பதிவு செய்யப்பட வேண்டியது அவசியம் என்றும் நான் உள்நாட்டு பத்திரத்தை ஏற்படுத்தி கிரயம் பெற்றுள்ளதால் மேற்படி

PREMI R
Digitally signed by PREMI R
Date: 2025.10.07 16:40:04 +0530

கிரயம் செல்லத்தக்கது அல்ல என்றும், மேற்படி கிரயத்தை வைத்து பிரதிவாதிகள் தொந்தரவு செய்வதாக வழக்கு தாக்கல் செய்துள்ளதும் சரியல்ல என்றும் சொன்னால் சரியல்ல. தாவா வழக்கின் பிரதிவாதிகளான சுப்பிரமணியன் மற்றும் சண்முகம் ஆகியோர் எப்பொழுது என்னை தொந்தரவு செய்து வருகிறார்கள் என்றால் கடந்த ஆறு, ஏழு வருடங்களாக தொந்தரவு செய்து வருகிறார்கள் தேதி குறிப்பிட்டு ஞாபகம் இல்லை. பூசத்துரை என்பவர் உண்மையிலேயே ஊரில் இருந்திருந்தால் மேற்படி பாகப்பிரிவினை வழக்கின் தீர்ப்பானையின்படி பூசத்துறைக்கு ஒரு பங்கு ஒதுக்கப்பட்டுள்ளதால் அதன் அடிப்படையில் கிரையப் பத்திரத்தை பதிவு செய்து கொடுத்திருப்பார் என்றும் அவர் இல்லாததால் மேற்படி வா.சா.ஆ.5 ஆவணத்தை பொய்யாக உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

9. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. ஆறு, ஏழு வருடங்களுக்கு முன்னால் நான் தாவா சொத்தில் நெல் விவசாயம் செய்தேனா என்றால் விவசாயம் செய்தேன். அதற்கான அடங்கல் சான்றிதழை நான் கிராம நிர்வாக அலுவலரிடம் இருந்து பெற்று தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது.நான் சொல்வது போல் நெல் விவசாயம் செய்யவில்லை என்றும் மேற்படி பாகப்பிரிவினை வழக்கு தொடரப்பட்ட காலம் முதலே தாவா சொத்துக்கள் கருவேல மரங்கள் நிரம்பி உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. தாவா வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்னால் நான் தாவா சொத்தில் நெல் விவசாயம் செய்தேனா என்றால் செய்தேன்.

PREMI R
Digitally signed by PREMI R
Date: 2025.10.07 16:40:13 +0530

நான் விவசாயம் செய்தது தொடர்பாக நீதிமன்றத்தில் ஏதேனும் புகைப்படங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் உண்மையாகவே விவசாயம் செய்திருந்தால் அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றும்நான் விவசாயம் செய்யாததால் தான் மேற்படி ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

10.தாவா சொத்துகளுக்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் என் தந்தை பெயரில் உள்ளது. தாவா சொத்துக்களுக்கு பட்டா என் தந்தை பெயரில் இல்லை என்றும் முத்தையா பூசத்துறை மற்றும் என் பெயரில் கூட்டு பட்டாக உள்ளது என்றும் சொன்னால் சரிதான். தாவா சொத்தை நான் கிரயம் பெற்று இருந்தால் அதற்கான பட்டா மாறுதல் செய்திருப்பேன் என்றும் நான் கிரையம் பெறாததால் தான் பட்டா மாறுதல் செய்யாமல் தற்பொழுது வரை கூட்டு பட்டாவாக உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களில் 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கும் சம பங்கு உள்ளது என்றும் எனக்கு மட்டுமே பாத்தியம் என்று கோருவது சரியல்ல என்றும் சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் உள்ள வியாஜ்ஜிய மூலமும் நான்குமாலும் தவறு என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2025.10.07 16:40:22 +0530